100 நாள் வேலை புதிய சட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காமல்

# கிராமப்புற மக்களின் முதுகெலும்பை முறிக்கும் மோடி அரசு!

## அமைச்சர் ஐ.பெரியசாமி கடும் கண்டனம்!

சென்னை, மார்ச் 12-

"100 நாள் வேலை புதிய சட்டத்தை நிறைவேற்ற எந்த நடவடிக்கையையும் மோடி அரசு எடுக்கவில்லை! கிராமப்புறத்தின் முதுகெலும்பை முறிக்கும் மோடி அரசின் வஞ்சகத்திற்கு, துணை போகும் பழனிசாமியின் பச்சைத் துரோகத்திற்குத் தேர்தலில் மக்கள் பாடம் புகட்டுவார்கள்" என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான பிரதமர் மன்மோகன் ஆட்சியில், 2006ல் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில், 100 நாள் வேலைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்ற 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் கோடிக் கணக்கான கிராம மக்கள் பயன் அடைந்து வந்தார்கள். கிராமப் புறத்தில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் 18 வயது நிரம்பிய ஒருவருக்கு ஒரு நிதியாண்டில் குறைந்தபட்சம் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது சட்டப்படி உரிமையாக்கப்பட்டது.

### குறைத்து நிதி ஒதுக்கப்பட்டது!

வறுமை ஒழிப்புத் திட்டமான 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை மோடி ஆட்சிக்கு வந்தும் படிப்படியாக அழிக்க ஆரம்பித்தார். திட்டத்துக்கு நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டினார்கள். 2021-2022 ல் 98,468 கோடி ரூபாய் ஒதுக்கிய நிலையில் 2022-2023ல் 73,000 கோடி ரூபாயும் 2023-2024ல் 60 ஆயிரம் கோடி ரூபாயும் என ஆண்டு தோறும் குறைத்து நிதியை ஒதுக்கி வந்தார்கள். இந்தப் பற்றாக்குறையால் ஆண்டுக்குச் சராசரியாக வெறும் 40 நாட்கள் வேலை மட்டுமே என்ற நிலை உருவானது. இதனால், கிராமப்புறத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

100 நாட்களுக்கு அனைவருக்கும் வேலை கிடைக்க வேண்டுமென்றால் ரூபாய் 2.72 லட்சம் கோடி தேவை. ஆனால், அதற்குரிய நிதியை ஒதுக்காமல் மோடி அரசு வஞ்சித்தது. 2023 2024ல் ஒதுக்கப்பட்ட தொகையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.198 சதவீதம்தான். இந்தத் திட்டத்தில் 100 நாட்கள் கிடைத்த வேலை, மோடி ஆட்சியில் 30 நாட்கள் கூட கிடைப்பதில்லை. 2021ம் ஆண்டு முதல் 7.6 கோடி தொழிலாளர்களின் நூறு நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டப் பணி அட்டைகள் நீக்கப்பட்டன.

இப்படி மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன் ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு வாய் ஜாலங்களுடன் 'விபி கிராம் ஜி' எனும் புதிய சட்டத்தை எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு இடையே கொண்டு வந்தது.

### நாடாளுமன்றத்தில் தி.மு.க. கடும் எதிர்ப்பு!

கிராமப்புற ஏழை மக்களுக்கு நூறு நாள் வேலை வாய்ப்பை உறுதி செய்யும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதும், தேசப்பிதா காந்தியாரின் பெயரை நீக்குவதும்தான் பா.ஜ.க. அரசின் ஒரே நோக்கம் என்பதை முதலமைச்சர் அவர்கள் பல முறை சுட்டிக்காட்டினார்கள். இந்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட போது அதற்குக் கடுமையான எதிர்ப்பை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதிவு செய்தார்கள்.

இந்தப் புதிய சட்டத்தால் 125 நாட்கள் வேலை கிடைக்கும், மக்கள் கூடுதலாகப் பயன் பெறுவார்கள் என்றெல்லாம் சமாளிப்பு பதில்களைக் கூறிக் கொண்டிருந்த ஒன்றிய பாஜக அரசு, இதுவரை இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான எந்த ஆக்கப்பூர்வ நடவடிக்கையையும் எடுக்கவில்லை. சட்டத்தை எவ்வாறு செயல்படுத்தப் போகிறோம்? என்ற எந்தவொரு செயல்திட்டத்தையும் அறிவிக்காமல் கிடப்பில் போட்டு வைத்துள்ளது.



ஏப்ரல் 1ஆம் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்த இருக்கிற இந்தச் சட்டத்திற்கான அடிப்படை விதிகளையே இன்னும் வகுக்காமல் ஒன்றிய அரசு மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருகின்றது. மாநிலங்களுக்கு எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கப்படும் என்பதற்கான எந்தத் தெளிவான வழிகாட்டலும் இன்னமும் வகுக்கவில்லை. கிராம ஊராட்சிகளை எந்த அளவு கோல்களின் அடிப்படையில் தரம் பிரிப்பது என்பதும் இறுதி செய்யவில்லை.

### வேலை வாய்ப்பு உரிமையை பா.ஜ.க. பறிக்க முயல்கிறது!

புதிய சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், அதை நிறைவேற்றுவதற்கான எந்த நடவடிக்கையையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுக்காததைப் பார்க்கும் போது கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பு உரிமையை பா.ஜ.க. அரசு முற்றிலும் பறிக்க முயல்வது அப்பட்டமாகத் தெளிவாகிறது. விபிகிராம் ஜி சட்டத்திற்கு இதுவரை ஒன்றிய அரசு செய்தது விபிகிராம் ஜி திட்டத்திற்கு 50 ஆயிரம் ரூபாயில் லோகோ உருவாக்கியது மட்டுமே.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டச் சட்டத்தால் கிடைத்த பலன்கள் கூட விபிகிராம் ஜி சட்டத்தால் கிடைக்காத போதும், புதிய சட்டத்தைக்கூட அமல்படுத்த மோடி அரசு தயங்குகிறது. இதையெல்லாம் பார்க்கும் போது 100 நாள் வேலைத் திட்டத்தையே முற்றிலும் ஒழித்துக் கட்டும் முடிவில் மோடி அரசு இருப்பதையே இன்றைய செயல்பாடுகள் காட்டுகின்றன.

### 12 கோடி கிராமப்புற தொழிலாளர்கள் பாதிப்பு!

வாயில் நுழையாத வட மொழி பெயர் கொண்ட விபிகிராம் ஜி திட்டத்தில் மாநிலங்களின் மீது கூடுதல் நிதிச் சுமையை ஏற்றியிருக்கிறார்கள். 'வேலை என்பது அடிப்படை உரிமை' என்ற நிலையிலிருந்து 'தேவை அடிப்படையில் வேலை' என மாற்றம் செய்யப்பட்டது. 100 சதவிகித ஒன்றிய அரசின் நிதிப் பங்கீடு என்பதை 60:40 என மாற்றி மாநிலங்கள் மீது கூடுதல் நிதிச் சுமை சுமத்தப்பட்டுள்ளது. கிராமங்களை மீண்டும் வறுமையின் பிடியில் தள்ளும் புதிய திட்டத்தால் தமிழ்நாட்டில் மட்டும் சுமார் ஒரு கோடி கிராமப்புற மக்களுக்கு வேலை கிடைக்காத சூழல் ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் 12 கோடி கிராமப்புற தொழிலாளர்கள் பாதிக்கப்பட இருக்கிறார்கள். நூறு நாள் வேலைத் திட்டத்திற்குரிய ஊதியத்திற்கான நிதியை ஒன்றிய அரசு வழங்காத போதெல்லாம் அந்த உரிமைக்காகச் சட்டப்பூர்வமாகவும் மக்கள் மன்றத்திலும் தி.மு.க. போராடியது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தமிழ்நாடு தழுவிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது

### பழனிசாமியின் பச்சைத் துரோகம்!

ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் பழனிசாமியோ இந்த அநீதிக்கு வக்காலத்து வாங்கி தமிழ்நாட்டுக்குத் துரோகத்தைச் செய்தார். கிராமப்புற மக்களின் வயிற்றில் அடிக்கும் புதிய சட்டத்தை ஆதரித்து தனது துரோகப் பணியைச் செவ்வனே செய்து முடித்த பழனிசாமி, தான் ஆட்சிக்கு வரப்போவதில்லை என்பதும் தெரிந்தும் 150 நாட்களாக வேலையை உயர்த்துவேன் என நாடகமாடிக் கொண்டிருக்கிறார். புதிய சட்டத்தை ஒன்றிய அரசு உடனே அமல்படுத்த வேண்டும் என்று கூடச் சொல்ல பழனிசாமிக்கு துணிவில்லை. நூறு நாள் வேலைத் திட்டத்திற்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து வரும் வஞ்சகத்திற்கும் பழனிசாமியின் பச்சைத் துரோகத்திற்கும் மிக விரைவில் தமிழ்நாட்டு மக்கள் தேர்தலில் பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் ஐ. பெரியசாமி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

பதிவுத்துறை சார்பில்

# ரூ.14.92 கோடியில் 7 சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்!



சென்னை, மார்ச் 12-

பதிவுத்துறை சார்பில் ரூ.14.92 கோடி செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள 7 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட சர்க்கார்சாமக்குளம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய இரண்டு சார்பதிவாளர் அலுவலகங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.03.2026) தலைமைச் செயலகத்தில், பதிவுத்துறை சார்பில் 14 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள 7 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டத்தில் சர்க்கார்சாமக்குளம் சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் தருமபுரி பதிவு மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களை பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பதிவுத்துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

**7 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க,

கோ யம்புத்தூர் மாவட்டம் - கிணத்துக்கடவு மற்றும் சூலூர், தூத்துக்குடி மாவட்டம் - ஏரல், விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர், திருவள்ளூர் மாவட்டம் - பொன்னேரி, திருப்பத்தூர் மாவட்டம் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் சிவகங்கை மாவட்டம் - திருப்புவனம் என மொத்தம் 14 கோடியே

92 இலட்சம் ரூபாய் செலவில் பதிவுத்துறைக்கு கட்டப்பட்டுள்ள 7 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**சர்க்கார்சாமக்குளம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய இடங்களில் புதியதாக உருவாக்கப்பட்ட 2 சார்பதிவாளர் அலுவலகங்களை திறந்து வைத்தல்**

2025-2026-ஆம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பை தொடர்ந்து கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 14 கிராமங்களில் 6 கிராமங்களை பிரித்து அந்த 6 கிராமங்களை உள்ளடக்கி கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட சர்க்கார்சாமக்குளம் சார்பதிவாளர் அலுவலகம்;

தருமபுரி பதிவு மாவட்டம், பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 12 கிராமங்கள், பென்னாகரம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2 கிராமங்கள், தருமபுரி (மேற்கு) சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 5 கிராமங்கள் மற்றும் தருமபுரி 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 3 கிராமங்கள் பிரித்து மொத்தம் 22 கிராமங்களை உள்ளடக்கி தருமபுரி பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட பாப்பாரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுவதன் மூலம் பொது மக்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவைகளை அளிக்க இயலும்.

இந்த நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வேப்பந்தட்டையில் , மகாதேவி ஜெயபால் தனது சொந்த செலவில் புனரமைக்கப்பட்ட

# ரூ.1.இலட்சம் மதிப்பில் பேரறிஞர் அண்ணா சிலை!

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. திறந்து வைத்தார்!

பெரம்பலூர், மார்ச் 12-

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டையில் கடந்த 2009ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை புதியதாக நிறுவப்பட்டிருந்தது. அப்போதைய தகவல் தொழில்நுட்பத்துறை ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா, அந்த சிலையை திறந்து வைத்தார். அந்த சிலை வர்ணங்கள் உரிந்து,சேதமடைந்திருந்தது. பெரம்பலூர் மாவட்ட மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால் தனது சொந்த செலவில், ரூ.1. இலட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சிலையை மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி.திறந்து வைத்து, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ., மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.ராஜ்குமார், செ.நல்ல தம்பி, ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பாளை.மணிவண்ணன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.அழகுவேல், செல்வம், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா, பசும்பலூர் கிளைச் செயலாளர் ஜெயபால், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

தமிழ்நாட்டில் திட்டங்களை தீட்டி

# மக்கள் முன்னேற்றத்திற்காக உழைத்துக் கொண்டிருப்பவர் முதலமைச்சர்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேச்சு!

செஞ்சி, மார்ச் 12-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி சார்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செஞ்சி மத்திய ஒன்றியம் பெருங்காப்பூர், கோட்டிகல் பாறை, பசுமலை தாங்கல், பரதன் தாங்கல்ஆகிய ஊராட்சியில் அரிசி உள்ளிட்ட நலதிட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிநடைபெற்றது.

நிகழ்ச்சிக்குசெஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் ஒன்றிய கவுன்சிலர் பச்சையப்பன் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் யசோதரை கண்ணன்,உமா சங்கர்ஆகியோர் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரையாற்றி பெருங்காப்பூர், கோட்டிகள் பாறை, பசுமலை தாங்கள், பரதன் தாங்கள்ஆகிய ஊராட்சிகளில் உள்ள 2000 நபர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கிசிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியின் போது பசுமலை தாங்கள் கிராமத்தைச் சேர்ந்த தணிகாசலம் என்பவர் மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார். தி.மு.க.வில் இணைந்த தணிகாசலத்திற்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.



நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்தாண்டு காலத்தில் கலைஞரை மிஞ்சி பத்து மடங்கு இன்றைக்கு திட்டங்களை தீட்டி நாட்டு முன்னேற்றத்திற்காகவும், மக்களின் முன்னேற்றத்திற்காகவும் இன்றைக்கு உழைத்துக் கொண்டு வருகிறார். அந்த வகையில் கல்வித்துறையில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், உயவுக்கு படி, நான் முதல்வன் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியும்,கல்லூரியில் படிக்கும் 10 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினியை வழங்கி கல்வியில் சிறந்தது தமிழ்நாடு என்ற தொலை நோக்கு சிந்தனையுடன் ஆட்சியை நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் 1.32கோடி மகளிர்களுக்கு ரூ 5000வழங்கி தாயுமானவராக திகழ்ந்து வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்றென்றும் நீங்கள்ஆதரவாகவும் உறுதுணையாக இருக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில்மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த்,ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவட்டப் பிரதிநிதி அய்யாதுரை, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் நாராயணன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அரவிந்த ராஜ், ஊராட்சி கழக நிர்வாகிகள் பெருங்காப்பூர் உதய சூரியன், பூங்காவனம், செல்வராஜ், ராஜா ராமன், பரதன் தாங்கள் மணிகண்டன்,மோகன் பெரியார்,

இளைஞர் அணி அன்பு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# விழுப்புரத்தில் தளபதி கோப்பை இறகுப் பந்துப் போட்டி!

விழுப்புரம், மார்ச் 12–

கழகத் தலைவர் – முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க நடத்தும் "தளபதி கோப்பை இறகு பந்து சாம்பியன்ஷிப் போட்டி"யில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், பொதுக் குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, ஒன்றிய கழக செயலாளர்கள் க.மும்மூர்த்தி, கல்பட்டு வி.இராஜா, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், எஸ்.லூயிஸ், வே. கில்பர்ட்ராஜ், பேரூராட்சி தலைவர் ராயல் அன்பு, நகர பொருளாளர் இளங்கோ, நகர மன்ற துணை தலைவர் சித்திக் அலி, தொ.மு.ச நிர்வாக பணியாளார் சங்க செயலாளர் வாலிபால் மணி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ரா.சதிஷ், இரா.அகிலன், இரா.கிருஷ்ணராஜ், சரவணகுமார், ராஜீவ்காந்தி, அருள்மொழி, சே.சூர்யா, கேபிள் சுரேஷ்பாபு, அமர்ஜி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் பார்த்தசாரதி, தஷ்ணாமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

